பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**07 04 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கேரளம், அசாம் மாநிலங்களிலும், புதுச்சேரி யூனியன்பிரதேசத்திலும் தேர்தல் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

2. மத்தியிலும், யூனியன்பிரதேசத்திலும் ஒரே அரசு இருந்தபோதும் புதுச்சேரி வளர்ச்சி பெறவில்லை என்று திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

3. தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ் குமாரை பதவியில் இருந்து நீக்கக் கோரும் எதிர்க்கட்சிகளின் தீர்மானத்தை நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் தலைவர்களும் நிராகரித்துள்ளனர்.

4. ஹார்முஸ் நீரிணையை மீண்டும் திறக்காவிட்டால் ஈரானை ஒரே இரவில் அமெரிக்காவால் நிலைகுலையச் செய்ய முடியும் என்று அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா - பஞ்சாப் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் மழையால் ரத்தானது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

கேரளம், அசாம் மாநிலங்களிலும், புதுச்சேரி யூனியன்பிரதேசத்திலும் தேர்தல் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

இந்த மாநிலங்களில் அரசியல் கட்சித் தலைவர்கள் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கேரளத்தில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணியை ஆதரித்து அக்கட்சியின் மூத்த தலைவர் திருமதி பிரியங்கா காந்தி, அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. கே.சி. வேணுகோபால் ஆகியோர் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

ஆளும் இடதுசாரி ஜனநாயக முன்னணியை ஆதரித்து முதலமைச்சர் திரு. பினராயி விஜயன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எம்.ஏ.பேபி உள்ளிட்டோர் வாக்கு சேகரித்தனர்.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியை ஆதரித்து மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா, பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் உள்ளிட்டோர் பிரச்சாரம் செய்தனர்.

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள அசாமில் நேற்று பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, திப்ருகர், பார்பேட்டா உள்ளிட்ட இடங்களில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார்.

அம்மாநிலத்தில் பிஜேபி மூன்றாவது முறையாக தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியியும் அம்மாநிலத்தில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டது.

குவஹாத்தியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் குமரி செல்ஜா, காங்கிரஸ் அனைவருக்கும் நீதி மற்றும் சம உரிமைக்காக தொடர்ந்து பாடுபடும் என்று கூறினார்.

இதற்கிடையில் தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளதால் அதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெற உள்ளது.

மேற்குவங்கத்தில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள தொகுதிகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான பரிசீலனையும் இன்று நடைபெற உள்ளது.

<<<<>>>>

மத்தியிலும், யூனியன்பிரதேசத்திலும் ஒரே அரசு இருந்தபோதும் புதுச்சேரி வளர்ச்சி பெறவில்லை என்று திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

புதுச்சேரியில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், போலி மருந்துகளை உற்பத்தி செய்த வழக்கில் முக்கிய குற்றவாளிகள் மீதான விசாரணை நியாயமாக நடைபெறவில்லை என்று கூறினார்.

புதுச்சேரியின் நீண்டகால கோரிக்கைகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்றும், மாநில அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் நிறைவேற்றப்படவில்லை என்றும் திரு. மு.க. ஸ்டாலின் கூறினார்.

<<<<>>>>

மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி, பொதுக்கூட்டங்களில் அரசியலமைப்புச் சட்டப் பதவிகளில் இருப்பவர்களை அவமதிப்பதோடு மட்டுமல்லாமல், திட்டமிட்டு தவறான தகவல்களைப் பரப்பி வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

கொல்கத்தாவின் பெஹாலா பகுதியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில எதிர்க்கட்சித் தலைவர் திரு. சுவேந்து அதிகாரி, தனது கட்சியின் தேர்தல் வாய்ப்புகள் சரிவதைப் புரிந்து கொண்டதாலேயே முதல்வர் இத்தகைய பொய்ப் பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்தார்.

மேலும், மாநிலம் தழுவிய தேர்தல் பிரசாரம் முழுவதையும் தன்னைச் சுற்றியே அவர் அமைத்துக் கொள்வதாகவும் அவர் விமர்சித்தார்.

மதுவா சமூகத்தின் மதிப்பிற்குரிய தலைவரான குருசந்த் தாகூரை முதல்வர் அவமதித்துவிட்டதாகவும், தனது பேச்சுகளில் தொடர்ந்து பொய்களைக் கூறி வருவதாகவும் திரு. சுவேந்து அதிகாரி அவர்கள் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ் குமாரை பதவியில் இருந்து நீக்கக் கோரி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை மாநிலங்களவைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் மற்றும் மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா ஆகியோர் நிராகரித்துள்ளனர்.

இந்தத் தீர்மானத்தை ஆய்வு செய்தபின், அனைத்து அம்சங்களையும் கவனத்தில் கொண்டு, அதை ஏற்க இருவரும் மறுத்துவிட்டதாகத் தனித்தனியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, தலைமைத் தேர்தல் ஆணையர் ஒருதலைப்பட்சமாக செயல்படுவதாகக் கூறி, அவரை நீக்கக் கோரி எதிர்க்கட்சிகள் முதல் முறையாக இரண்டு அவைகளிலும் நோட்டீஸ் அளித்திருந்தன.

<<<<>>>>

இந்தியாவின் வரி விதிப்பு முறையானது எளிமை, தொழில்நுட்பம், நம்பிக்கை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை நோக்கி முன்னறேறியுள்ளதாக நிதி அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இது நாட்டின் நிதித் திறனை வலுப்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற பொது நிதி மற்றும் கொள்கைக்கான தேசிய நிறுவனத்தின் பொன் விழா கொண்டாட்டத்தில் உரையாற்றிய அவர், கடந்த பத்து ஆண்டுகளில் நாட்டின் வருவாய் சார்ந்த கட்டமைப்பில் ஒரு மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கூறினார்.

முன்பு அதிக வரி விகிதங்கள், குறுகிய வரி வரம்பு மற்றும் தன்னிச்சையான மதிப்பீடுகளைக் கொண்டிருந்த நிலை மாறி, தற்போது நவீனமான முறை பின்பற்றப்படுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், மாநிலங்களின் கடன்களையும் உள்ளடக்கிய நாட்டின் ஒட்டுமொத்த அரசின் கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதமானது 81 சதவீதமாக உள்ளது என்றும், இது ஜெர்மனிக்கு அடுத்தபடியாக வளர்ந்த பொருளாதார நாடுகளிலேயே மிகக்குறைவான விகிதம் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<>>>>

தில்லி சட்டப்பேரவை வளாகத்திற்குள் அத்துமீறி நுழைந்த சம்பவம் தொடர்பாக மூன்று நபர்களை கைது செய்து காவல்துறையினர் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

நேற்று காரில் வந்த நபர் ஒருவர், சட்டப்பேரவை வளாகத்திற்குள் அத்துமீறி நுழைந்து பாதுகாப்பு விதிமுறைகளை மீறினார்.

இதையடுத்து தில்லி முழுவதும் காவல்துறையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அதன் விளைவாக, ரூப்நகர் பகுதியில் அந்த வாகனம் மறிக்கப்பட்டு, அதில் இருந்தவர்கள் பிடிபட்டனர்.

விசாரணையில், பிடிபட்ட முக்கிய நபர் உத்தரப்பிரதேச மாநிலம் பிலிபித்தைச் சேர்ந்த 37 வயதான சரப்ஜித் சிங் என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது.

அவருடன் இருந்த மேலும் இருவரையும் காவல்துறையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

<<<<>>>>

மத்திய சுரங்க அமைச்சகம், கனிம சுரங்கங்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளில் முக்கிய திருத்தங்களை செய்துள்ளது.

இந்தப் புதிய திருத்தங்கள், சுரங்க குத்தகையில் அருகாமையில் உள்ள பகுதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற கனிமங்களை இணைப்பதற்கான வழிமுறைகளை எளிதாக்கியுள்ளது.

இதன் மூலம், ஆழமான பகுதிகளில் கனிமங்களை எடுப்பதற்கான குத்தகை அல்லது ஒருங்கிணைந்த உரிமம் வைத்திருப்பவர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியை ஒட்டியுள்ள நிலப்பரப்பை ஒருமுறை விரிவுபடுத்திக் கொள்ள விண்ணப்பிக்கலாம்.

இந்த விண்ணப்பங்களை ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பரிசீலிக்க புதிய விதிகள் வழிவகை செய்கின்றன என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உலகளாவிய எரிசக்தி பாதையான ஹார்முஸ் நீரிணையை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மீண்டும் திறக்காவிட்டால் ஈரானை

ஒரே இரவில் அமெரிக்காவால் நிலைகுலையச் செய்ய முடியும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வளைகுடா பகுதியில் எரிசக்தி விநியோகம் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், ஒரு ஒப்பந்தத்திற்கு ஈரான் முன்வர வேண்டும் என்று திரு. ட்ரம்ப் காலக்கெடு விதித்துள்ளார்.

வாஷிங்டனில் நேற்று வெள்ளை மாளிகையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், ஈரானுடன் ஒப்பந்தம் எட்டப்படாவிட்டால் அந்நாட்டின் முக்கிய கட்டமைப்புகள் மிக விரைவாக அழிக்கப்படலாம் என்று கூறினார்.

சில ஈரானிய தலைவர்கள் நல்லெண்ணத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்துள்ளதாகவும், இருப்பினும் நிலைமை இன்னும் உறுதி செய்யப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இப்பகுதியில் அமெரிக்காவின் ராணுவ முயற்சிகளுக்கு ஆதரவளிக்காத பசிபிக் கூட்டணி நாடுகளை, குறிப்பாக நேட்டோ நாடுகளை திரு. டிரம்ப் கடுமையாக விமர்சித்தார்.

இதற்கிடையில், அமெரிக்காவின் போர்நிறுத்த முன்மொழிவுகளை ஈரான் நிராகரித்துள்ளது.

ஈரானுக்கு எதிரான விரோதப்போக்கை அமெரிக்கா உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் பொருளாதார தடைகளை திரும்ப பெற வேண்டும் என்றும் அந்நாடு கோரிக்கை விடுத்துள்ளது.

<<<<>>>>

சுமார் 50 ஆண்டுகளுக்குப் பிறகு நிலவை நோக்கிச் சென்றுள்ள ஆர்ட்டெமிஸ்-2 விண்கலத்தின் வீரர்கள், பூமியிலிருந்து அதிக தூரம் பயணம் செய்த மனிதர்கள் என்ற புதிய உலக சாதனையை படைத்துள்ளனர்.

அப்பல்லோ-13 விண்கலம் 1970-ஆம் ஆண்டு நிகழ்த்திய சாதனையை முறியடித்து, பூமியிலிருந்து சுமார் 4 லட்சத்து 6 ஆயிரத்து 774 கிலோ மீட்டர் சென்று இந்த வரலாற்று மைல்கல்லை அவர்கள் எட்டியுள்ளனர்.

தற்போது நிலவைச் சுற்றி வரும் இந்த ஆறு மணி நேரப் பயணத்தின் போது, நிலவின் மறுபக்கத்தை இதுவரை யாரும் காணாத மிகத் தெளிவான காட்சிகளை விண்வெளி வீரர்கள் ரசித்து வருகின்றனர்.

இந்தத் திட்டமானது நிலவின் தென்துருவத்தில் மனிதர்களை இறக்குவதற்கான நாசாவின் அடுத்தகட்ட முயற்சிக்கு ஒரு

முன்னோடியாகும் என்று விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

<<<<>>>>

ஆப்கானிஸ்தானின் கிழக்கு பகுதியில பெய்து வரும் கனமழை மற்றும் வெள்ளம் காரணமாகப் பல்வேறு இடங்களில் வீடுகளின் கூரைகள் இடிந்து விழுந்ததில் 9 பேர் உயிரிழந்தனர். 9 பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக அந்நாட்டின் பல பகுதிகளில் இயற்கை சீற்றம் தொடர்ந்து பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா - பஞ்சாப் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் மழையால் ரத்து செய்யப்பட்டதால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளிகள் வழங்கப்பட்டது.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற போட்டியில் டாஸ் வென்று முதலில் விளையாடிய கொல்கத்தா அணி, 3 புள்ளி 4 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 25 ரன் எடுத்திருந்த நிலையில் மழை காரணமாக ஆட்டம் தடைபட்டது.

பின்னர் தொடர்ந்து மழை பெய்ததால் ஆட்டம் ரத்து செய்யப்பட்டு இரு அணிகளுக்கும் புள்ளிகள் பகிர்ந்தளிக்கப்பட்டது.

குவஹாத்தியில் இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

-------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் சென்னை அணி இன்று காசி அணியை எதிர்கொள்ள உள்ளது.

இந்தப் போட்டி இன்றிரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**